மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதிகோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(4) அரசினர் தீர்மானம்.

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் 'வகை-2 பிற உறுப்பினர்கள்' என்ற தலைப்பின்கீழ் (எச்) பகுதிக்கிணங்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக வாரியத்தின் பதவிக் காலம் முடிவடைந்ததன் காரணமாக, அதில் உறுப்பினராக இருந்த திரு. ஏ எம். பரமசிவன் அவர்களின் பதவிக்காலம் முடிவடைவதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஓர் உறுப்பினரை இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(1) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை மற்றும் நீர்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஒரு உறுப்பினரைத்

தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 17-2-79 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனத்தாள்கள் 19-2-79 திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 20-2-79 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 22-2-79 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(முற்பகல் 9-10)

(5) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டு இன்றோடு ஒரு வருடம் 7 மாதம் 16 நாட்கள் ஆகிறது. இந்த நாடு சுதந்திரம் அடைந்து 31 ஆண்டு 6 மாதம் ஒரு நாள் ஆகிறது. இதை நான் ஏன் கூறுகிறேன் என்று சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. 5 ஆண்டுக் கால அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் மூன்றில் ஒரு பகுதி கழிந்து விட்டது, இதுவரை மூன்று முறை ஆளுநர் அவர்களின் உரையும் நடந்து விட்டது. இப்போது வரப்போகிற வரவு-செலவுத் திட்டத்தோடு அநேகமாக இரண்டரை ஆண்டு ஆட்சியில் அநேகமாக பாதி ஆண்டுகளுக்கான வரவு-செலவு திட்டமும் முடியப்போகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்த இரண்டரை ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே தமிழக மக்களுக்கு எத்தனை காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இப்படிக் கூறுகிறபோது திடீரென்று ஏற்பட்ட விபத்துக்கு உதவியதைச் சாதனை என்று நீங்கள் கூறிவிடக் கூடாது. புயல், வெள்ளங்களால் ஏற்பட்ட சேதங்களைச் சர்வே செய்து சில உதவிகளைச் செய்திருக்கலாம். இதை எல்லாம் சாதனை என்று ஏற்றுக்கொள்ள முடியாது. திடீரென்று தீ பிடித்துவிடுகிறது ஒரு வீட்டில். தீயை அணைத்துவிட்டோம் என்று சொல்வதைப்போல் அல்ல சாதனை என்பது.